DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 47/2023 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | நதியா ராணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் . நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூல்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

1.2022 July to 2022 September வரை REE PVT Ltd Company யிலிருந்து மனுதாரர் பெற்ற சம்பள ரசீது Print out copy (ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

2. 01.08.2022 to 31.08.2022 OCBC Bank– Statement of Savings account E.Print out copy (ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

3. 03.08.2021 சிங்கப்பூர் அரசால் வேலைக்காக மனுதாரருக்கு வழங்கப்பட்ட S Pass Print out copy (ம.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

4. எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

5. மனுதாரரின் வங்கி கணக்குப் புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

6. 29.10.2022 தேதியிட்ட Accident Register சான்றிட்ட நகல் (ம.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

7. 14.12.2022 தேதியிட்ட Wound Certificate சான்றிட்ட நகல் நகல் (ம.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

8. Medical expenses bills அசல் (ம.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

9. Discharge summary அசல் (ம.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

10. 29.10.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் (ம.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

11. 11.11.2022 தேதியிட்ட M.V.I Report சான்றிட்ட நகல் (ம.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

12. 16.02.2023 தேதியிட்ட Charge Sheet சான்றிட்ட நகல் (ம.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

13. Feb 2023 to September 2023 தேயிட்ட medical bills அசல் நகல் (ம.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

14. X–Ray அசல் நகல் (ம.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

15. July 2024 to August 2024 தேயிட்ட medical bills அசல் (ம.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

16. 11.07.2024 to 17.07.2024 Discharge summary அசல் அசல் (ம.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** எனக்கு பாஸ்போர்ட் உள்ளது என்றால் சரிதான். அந்த பாஸ்போர்ட் தற்போது நடைமுறையில் உள்ளது என்றால் போன வருடம் காலாவதியாகி மீண்டும் நான்

புதுப்பித்துள்ளேன், நான் 2022 ல் பாஸ்போர்ட்டை புதுப்பித்துவிட்டேன். நான் செப்டம்பர் மாதம் பணிக்காக மீண்டும் சிங்கப்பூர் சென்றேன். தற்போது நான் இந்த வழக்கிற்காக சிங்கப்பூரிலிருந்து இந்தியா வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு நான் எந்த நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேனோ அதே நிறுவனத்தில் தான் தற்போதும் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான், அதே பணியில் இல்லை அந்த பணியிலிருந்து கீழ்நிலைப் பணியில் பணியாற்றி வருகிறேன்.

2. நான் மீண்டும் பணியில் சேர்ந்த போது நான் மருத்துவச் சான்று சமர்ப்பித்து பணியில் சேர்ந்தேனா என்றால் இல்லை, டிஸ்சார்ஜ் சம்மரி மட்டும் கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள டிஸ்சார்ஜ் சம்மரியானது 2022 ம் வருடம் மீனாட்சி மிசன் மருத்துவமனையால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த டிஸ்சார்ஜ் சம்மரியை எனது நிறுவனத்தில் சமர்ப்பித்துதான் நான் வேலையில் மீண்டும் சேர்ந்தேன் என்றால் சரிதான். 2022 ம் ஆண்டிற்கு பிறகு, 2024 க்கிற்கும் இடைப்பட்ட இரண்டு வருடங்களுக்குள் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் சிகிச்சை எதுவும் மேற்கொண்டேனா என்றால் மேற்கொண்டேன். 2022 முதல் 2024 வரையில் சிகிச்சை மேற்கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், அது ஜீலை மாதம் 2024 ற்கு உட்பட்டது. அந்த 2024 ம் ஆண்டிற்கான டிஸ்சார்ஜ் சம்மரியானது நான் காலில் வைத்திருந்த பிளேட்டை எடுத்துவிட்டு அதற்காக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

3.நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ,3 எஸ்.பாஸ் எத்தனை வருட காலத்திற்குரியது என்றால் 2 வருட காலத்திற்குரியது. நான் இந்திய அரசாங்கத்திற்கு வருமான வரி எதுவும் செலுத்திவருகிறேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 ஆன எனது வங்கிக் கணக்கு ஜீலை 2022 முதல் செப்டம்பர் 2022 வரை வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள தேதி முடிந்த பின்புதான் நான் இந்தியா வந்தேன் என்று சொன்னால் இல்லை, அதற்கு முன்பாகவே வந்துவிட்டேன். நான் எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமாகிவிட்டது என்றும், அதனால்தான் நான் ஏற்கனவே வேலை பார்த்த நிறுவனத்திலேயே வேலை பார்த்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான்

சொல்லுவது போல் எவ்வித வருமான இழப்பும் எனக்கு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. விபத்தில் என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனம் என்று சொன்னால், பதிவு செய்யப்பட்டது ஆனால் பதிவெண் வாங்கப்படவில்லை. என்னுடைய கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும், நான் வழக்கிற்காக ஓட்டுநர் உரிமம் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. விபத்து நடந்த சாலை நான்கு வழிச் சாலையா அல்லது இரண்டு வழிச் சாலையா என்றால் இரண்டு வழிச் சாலை ஆகும். இந்த இரண்டு வழிச் சாலையில் நாங்கள் எங்கிருந்து எங்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றால் காரைக்குடியிலிருந்து நெற்புகப்பட்டிக்கு சென்றுகொண்டிருந்தோம். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11 என்னுடைய கணவரின் இருசக்கர வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வாகனத்திற்கு பதிவெண் கிடையாது என்றும், ஓட்டுநர் உரிமம் ஆய்வின் போது தாக்கல் செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அப்போது சிங்கப்பூரில் அவர் ஓட்டுநராக பணிபுரிந்ததால், நிறுவனத்தில் உரிமத்தை கொடுத்து வைத்திருந்ததால் என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை, நான் எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் அது என்னவகையான ஓட்டுநர் உரிமம் என்று தெரியவரும் என்றால் சரிதான், தாக்கல் செய்கிறேன். இருசக்கர வாகனத்தில் எனது கணவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான்.

6. இந்த விபத்து நடந்த சாலையில் இடதுபுறமாக இருந்த கட்டிடத்திலிருந்து ஒரு லாரி இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக திரும்பி வந்தததாக வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு விபத்து எப்படி நடந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியும். இந்த இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக வந்த லாரி ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து லாரியை திருப்பியதால்தான் எதிரே வந்த கார் ஓட்டுநர் விபத்தினை தவிர்க்கும் பொருட்டு சாலையின்

இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக திருப்பியபோதுதான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

7. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை கவனமாகத்தான் ஓட்டி வந்தார் என்றும் லாரி ஓட்டுநர் லாரியை அதிவேகமாகவும் கவனக்குறைவாகிவும் ஓட்டி வந்து திருப்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீடு வழங்க எவ்வித கடப்பாடும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தினால் என் கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால், தலையில் இல்லை வலது காதில்தான் ஏற்பட்டது. நானும், எனது கணவரும் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.